மருத்துவர் வாமன் என்று அழைக்கப்படும் Dr. V. தர்மரட்ணம் அவர்கள் விடுதலைப்புலிகளின் மூத்த உறுப்பினர்களில் ஒருவர். யாழ் பல்கலைக்கழகத்தில் தனது உயர்கல்வியை ஆரம்பித்து, பின்னர் தமிழீழ மருத்துவக் கல்லூரியில் தனது மருத்துவ கல்வியை நிறைவுசெய்து தமிழீழ மருத்துவ துறையில் பெரும்பங்கு வகித்தவர்.தேசிய விடுதலைப் போராட்டத்தில் தன்னை முழுமையாக அர்ப்பணித்து, தனது காலை இழந்தவர். தமிழீழ தேசியத் தலைவர் அவர்களின் நம்பிக்கைக்கு பாத்திரமான இவர்,தனது மருத்துவ சேவை மூலம் பல்லாயிரக்கணக்கான போராளிகள் மற்றும் மக்களின் உயிர்களையும் காத்தவர். தேசியப்பற்றுடன் இறுதிவரை களத்தில் நின்று, தனது உயிரை பணயம் வைத்து மக்களுக்கு சேவையாற்றியவர். இறுதி யுத்தத்தின் முக்கிய சாட்சியங்களுள் ஒருவரான இவர் புனர்வாழ்வு என்ற பெயரில் தடுத்துவைக்கப்பட்டு பல சித்திரவதைகளையும் அனுபவித்து மீண்டவர். புலம்பெயர் தேசத்தில் அடைக்கலம் புகுந்த நிலையிலும் அவர் தேசிய பற்றையும் மனிதநேயப் பணிகளையும் கைவிடவில்லை."ஊதா" என்ற தொண்டு நிறுவனத்தின் உருவாக்கத்தில் பெரும்பங்கு வகித்தது மட்டுமன்றி,புலத்தில்; தவிக்கும் எமது உறவுகளை வாழவைக்கும் பெரும் பணியில் தன்னை அர்பணித்து செயற்பட்டு வருகிறார்.



Related


பிரித்தானிய தமிழர் பேரவை இலங்கை அரசிடம் விலைபோய்விட்டதா?
In "செய்திகள்"



"எம் நிலம் எமக்கே வேண்டும்" மாபெரும் கவனயீர்ப்புப் போராட்டம் பித்தானியா
In "செய்திகள்"



பிரித்தானிய தமிழர் பேரவையின் 'தேசிய அவை உறுப்பினர்கள் தெரிவு
In "செய்திகள்"


புதிய அரசியலமைப்புக்கு மக்களின் அங்கீகாரம் அவசியம்
அரசியலமைப்பிலுள்ள [...]

இன்றைய நாளில் வீரச்சாவடைந்த மாவீரர்களின் விபரங்கள்




சிறப்புச் செய்திகள்

**நல்லாட்சி அரசாங்கத்தில் மக்களுக்கு நம்பிக்கை இல்லை**


நல்லாட்சி அரசாங்கத்தில் மக்கள் நம்பிக்கை இழந்துள்ளனர் நல்லாட்சி [...]

**அரசாங்கத்துக்கு பாரிய தலையிடியைக் கொடுப்போம்**


எதிர்காலத்தில் அரசாங்கத்துக்கு பாரிய தலையிடியைக் கொடுப்போம் –மகிந்த! [...]

பாருங்கள் பகிருங்கள்




குறுஞ் செய்திகள்

- "காந்தி" எப்படி "சூசை"யாக மாறினார். (பிரிகேடியர் சூசை)
- எங்கள் இனத்தின் இன்றைய இன்னல் தீர்க்க இன்னொருமுறை எழுந்துவர மாட்டாயோ?
- படைத்துறை வரைபடத் தளபதி பிரிகேடியர் சசிக்குமார்
- பிரிகேடியர் பானு (அரியாலை முதல் முள்ளிவாய்க்கால் வரை...)
- கனீர் என்ற இனிமையான குரல் அனைவரின் மனதிலும் பதிந்தது. இசைப்பிரியா
- தன்னைத் தானே சுட்டுக் கொன்ற பிரிகேடியர் ஜெயம்
- தியாகங்களின் மற்றுமொரு வடிவம் தளபதி ரமேஸ்
- விரைவில் வரும்... புலிகளின் ஆட்சி... காத்திருங்கள் துரோகிகளே....

தமிழீழ குடியரசு







எம்மவர் நிகழ்வுகள்

**எழுச்சிக்குயில் – சுவிஸ்**




**கவனயீர்ப்புப் போராட்டம் – சுவ**



உறவுகளுக்கு உதவுவோம்

**உயிருக்கு போராடும் ஐந்து உ**


கிளிநொச்சியில் உ போராடும் ஐந்து உ அவசரமாக [...]

**உதவி செய்விர்க**


உதவி செய்விர்கள அன்பார்ந்த புலபெ

**எம் இனம் உதவி**


விடுதலைப் புலிக உறுப்பினர் பிறை வாழ்வின் [...]

**முன்னால் போராளியின் பரிதா**


கேணல் கிட்டுப் பி கோதயனின் இன்

நாம் புதைக்கப்படவில்லை பல



















# பிரித்தானிய தமிழர் பேரவையின் (BTF) துரோகத்துக்கு துணை போகாதீர்கள்!

பிரசுரிக்கப்பட்ட நாள் : 14 மே, 2017

எனது பெயர் பவானி.நான் விடுதலைப்போராட்டத்தில் 1984 இல் இணைந்து, விடுதலைப்புலிகள் முதலாவது மகளிர் படையணியை உருவாக்கியவர்களுள் ஒருத்தி. முதல் பெண் மாவீரர் மாலதி அவர்களுடன் ஒன்றாக பயிற்சி பெறும் பாக்கியம் பெற்றவள்.




அன்று முதல் இன்று வரை, ஆயுதம் ஏந்தியும் அரசியல் ரீதியிலும் தமழீழ விடுதலைக்கா போராடி வருபவள் என்ற உரிமையோடு உங்களிடம் இந்த கோரிக்கையை வைக்கிறேன்! ஒரு நாட்டின் தேசிய இனங்கள், நாட்டு மக்களின் பண்புகள், ஆட்சி, இறைமை என்பன உட்பட அந்நாட்டைக் குறிக்கின்ற ஒட்டு மொத்த சின்னமாகவே தேசிய கொடி விளங்குகின்றது.

தேசிய கொடி வணக்கம் என்பது அந்த நாட்டை வணங்குவதற்கு சமமானது. ஒரு நாட்டின் உயர்வான சின்னமாக விளங்குவது தேசிய கொடி யாகும். எந்தவொரு நிகழ்சியிலும் தேசிய கொடி ஏற்றம் மிக முக்கியமான ஒன்றாகும்.

தேசிய கொடியின் சிறப்பு அந்நாட்டிற்கு உரியது போல,தேசிய கொடியினை அவமதிக்கும் செயலும் அந்நாட்டினை அவமதிப்பதாகும். இவ்வகையில் எமது தேசிய கொடியானது எத்தகைய முக்கியம் வாய்ந்தது என்பதை நாம் அறிவோம்.

1977 ம் ஆண்டுமுதல் தமிழீழ விடுதலைப்புலிகளின் கொடியாக இருந்து வரும் புலிக்கொடியின் எழுத்துக்கள் நீக்கப்பட்டு, தமிழீழத்தின் தேசிய கொடியாக 27.11.1990 மாவீரர் நாளன்று அறிவிக்கப்பட்டு, மக்களால் உணர்வுபூர்வமாக ஏற்று வணங்கப்பட்டு வருவது எமது தேசியக்கொடி.


எமது தேசிய கொடியை மூன்று நிறங்கள்அலங்கரிக்கின்றன. மஞ்சள், சிவப்பு, கறுப்பு. இதில் மஞ்சள் நிறமானது தமிழீழ மக்கள் ஒரு தனித்துவமான தேசிய இனம் என்பதால் சுயநிர்ணய உரிமை உண்டு அதனை மீட்டெடுக்க உரிமை உண்டு எமது தேசிய விடுதலைப் போராட்டம் அறத்தின்பாற்பட்டது மனித தர்மத்தை அடிப்படையாகக் கொண்டது என்பதைக் குறிக்கின்றது.

தமிழீழத்தை அடைந்தால் மாத்திரம் நாம் விடுதலை பெற்றதாக கொள்ள முடியாது. ஒரு புரட்சிகரமான சமுதாய மாற்றத்தை வேண்டிய அரசியல் இலட்சியத்தை சிவப்பு நிறம் குறிக்கிறது. விடுதலைப்பாதையானது கரடுமுரடானது சாவும், அழிவும், தாங்கொணா துன்பங்களும் நிறைந்தது. இத்தனையையும் தாங்கி கொள்ள இரும்பு போன்ற இதயமும், அசைக்க முடியாத நம்பிக்கையும், தளராத உறுதியும் வேண்டும் என்பதை கறுப்பு நிறம் குறிக்கின்றது.

இத்தகைய உயிரிலும் மேலாக கருதப்பட வேண்டிய தேசிய கொடியினை இன அழிப்புநாளான மே 18 நிகழ்வில் ஏற்றக்கூடாது என பிரித்தானிய தமிழர் பேரவையின் தமிழர் பேரவை (BTF) கூறுவது நியாயமற்ற செயலாகும். இது ஒட்டு மொத்த தமிழினத்தையே அவமதிக்கும்செயலாகும்.


இதனை நியாயப்படுத்த அவர்கள் கூறும் காரணங்கள் போலியானவை மட்டுமல்ல, ஏற்றுக் கொள்ள முடியாதவையும் கூட. ஆயிரமாயிரம் மாவீரர்களையும், தமிழீழ மக்களையும் எமது விடுதலைப்போரில் இழந்துள்ளோம். தற்போதை போராட்டம் சர்வதேச அரங்கிற்கு

நகர்ந்துள்ளதே தவிர இலட்சியம் மாறக் கூடாது. எமது நீதிக்கான போராட்டம் இதுவாகும்.



இதில் எமது தேசிய சின்னமான தேசியக்கொடியை சர்வதேசம் ஏற்றுக்கொள்ள வைப்பதே எமது உண்மையான வெற்றி. நாம் எதற்காக போராடினாம், ஏன் இன அழிப்பை எதிர்கொண்டோம் என்பதை சர்வதேச சமுகத்திற்குகாட்டப்போகும் நிகழ்வு தான் மே 18. இதில் எமது இனத்தின் அடையாளமான தேசிய கொடியினை ஏற்றாது புறக்கணிப்பது ஒட்டுமொத்தமான தேசத் துரோகம் ஆகும்.

நாம் ஒரு தேசிய இனம் என்பதை மறுத்து, எமது அடையாளங்களை அழிக்க முயலும் இலங்கை அரசுக்கு துணைபோகும் செயலையே BTF வெட்கமின்றி செய்துவருகிறது. BTF தலைமையின் கபட நாடகங்களிலும், நரித்தனமான, சுயநல முடிவுகளால் நேரில் பாதிக்கப்பட்டவர்களில் நானும் ஒருத்தி. விடுதலைப்போருக்காக எனது இளமையை தியாகம் செய்த நான், எத்தனையோ துன்பங்கள் அனுபவித்து, உயிர் தப்பி இந்த நாட்டில் அரசியல் தஞ்சம் கோரினேன்.



www.alamy.com - EPGNCH

எமது விடுதலைக்காக தொடந்து உழைக்க வேண்டும் என்ற ஒரே ஓர்மத்தில் BTF இல் இணைந்தேன். விசாவோ, வருமானமோ இல்லாமல் தவித்த போது கூட, தவறாமல் BTF நிகழ்வுகளில் கலந்துகொண்டவள் நான். BTF தனது பெயருக்கும் பெருமைக்குமாக என்னை எல்லா வழிகளிலும் பயன்படுத்தியது. எனது பாதுகாப்பை பற்றியோ, எனது பிள்ளைகளுக்கு ஏற்படக்கூடிய பாதிப்புக்கள் பற்றியோ எந்த அக்கறையும் இன்று என்னை எல்லா மேடைகளிலும் ஏற்றினார்கள். ஊடகங்களுக்கு பேட்டிகள வழங்க வைத்தார்கள். விதியில் தெருக்கூத்து ஆட வைத்தார்கள்.

ஆனால் இறுதியில், என்னை இலங்கை திருப்பி அனுப்ப முயன்ற போது, எனது உயிருக்கு நூறு வீதம் ஆபத்து இருப்பது தெரிந்தும் என்னை நடு வீதியில் கைவிட்டார்கள். எனக்காக சாட்சி வழங்க நீதிமன்றம் வருவதாக பொய் உத்தரவாதம் வழங்கி இறுதியில் காலைவரினார ஒரு வைத்தியர்கள். காரணம் கேட்ட போது, தமது அமைப்பு விதிகளை மீறினால் ப்தவி போய்விடும் என்று பதில். ஆக, எமது உயிரை விட அவர்களுக்கு பதவியே முக்கியம்! இப்படியாக நாட்டுக்காக போராடி, நாதியிழந்து நிற்கும், உறவுகளை பயன்படுத்திவிட்டு தூக்கி வீசும் ஈவுஇரக்கம் அற்ற பதவிப்பேய்கள் தான் தற்போதைய

தலைமை! இவர்களிடம் நான் ஏமாந்து போல நீங்களும் ஏமாற்றாதீர்கள்!



சிங்கள அரசின் ஆதிக்கதில் வாழும் தமிழ் மக்களே நாட்டில் துணிவோடு போராடும் வேளை, புலம்பெயர்ந்த தேசத்தில் வாழும் எம்மால் ஏன் தேசிய கொடியினை ஏற்ற முடியாது? தேசிய கொடியை பாதுகாத்து அடுத்த தலைமுறைக்கு உணர்த்தும் கடமையும் புலம்பெயர் மக்களிடமே உள்ளது. இதனை பிரித்தானிய தமிழர் பேரவை தடுக்க முயல்வது ஏன்? இதன் பின்னணி என்ன?

விடுதலப்போராட்ட உணர்வும் அதன் எச்சங்களையும் அடுத்த சந்ததிடம் போகாமல் தடுக்கும் மைத்திரி அரசினர் சதியை இவர்கள் நடைமுறைப்படுத்துவதை நாம் உணரவில்லையா? தேசிய கொடியினை புறக்கணித்து நடக்கும் எந்தப் பேராட்டமும் உண்மையான போராட்டமாக இருக்கமுடியாது.

இன அழிப்பு நாளான மே 18 எமது தேசிய துக்க தினம். அதனை எவரும் தமது சுய விருப்பின்படி நடாத்த அது ஒன்றும் திருமண விழா அல்ல. மக்கள் அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட விதிமுறைப்படியே ஒரு தேசிய நிகழ்வு இடம்பெற வேண்டும். தேசிய கொடி ஏற்றப்பட்டே இவ்வாறான பொது நிகழ்வுகள் இடம்பெறவேண்டும் தேசிய கொடி ஏற்றலுக்கு விதிமுறைகள் உண்டு. அவை பின்பற்றப்பட வேண்டும்.

இவற்றை மதிக்காதவர்களோ அமைப்புக்களோ இந்த நிகழ்வுகளை நடாத்தக்கூடாது. BTF தலைமை தேசிய கொடியை ஏற்ற விரும்பாவிட்டால், மே 18 நிகழ்வை தாங்கள் தான் நடாத்த வேண்டும் என அடம்பிடிப்பது ஏன்? இது பொது நிகழ்வு. மக்கள் விருப்பின்படியே இடம்பெற வேண்டும். மக்கள் அபிலாசைக்கு மதிப்பளிக்காத BTF இந்த நிகழ்வை நாடாத்த அருகதையற்றவர்கள். இவர்களால் ஏன் இதை மற்றவர்களிடம் விட்டு ஒதுங்க முடியாது?


மாவீரர் தினம் மற்றும் முள்ளிவாய்க்கால் தினம் ஆகிய இரண்டு தினங்களில் மட்டுமே புலம்பெயர் மக்கள் ஒற்றுமையுடன் ஒன்று திரண்டார்கள். கடந்த வருடம் இந்த ஒற்றுமையை குலைத்து, மக்களை பிளவு படுத்திய துரோகத்துக்கான பொறுப்பை BTF மட்டுமே ஏற்க வேண்டும். மக்கள் விருப்புக்கு எதிராக செயற்படும் இந்த BTF தலைமை தமது வரட்டு கௌரவத்திற்காக, தேவையற்ற இரண்டாவது நிகழ்வை நாடத்தி, தொடர்ந்தும் புலம்பெயர் மக்களின் ஒற்றுமையை குலைத்து வருவது தடுக்கப்படவேண்டும்.



விரட்டியடிக்கப்பட்ட சில துரோகிகள், எமது விடுதலைப்போராட்டம் என்ற பெயரில் ஆரம்பித்த சில பொது அமைப்புக்களை கையகப்படுத்தி, மீண்டும் தம்மை பிரபலப்படுத்திக்கொண்டது மட்டுமல்லாமல், பல்லாயிரக்கணக்கான போராளிகள் மற்றும் மக்களின் உயிர்தியாகத்தில் குளிர்காய்ந்து கொண்டு, இலங்கை அரசின் கைக்கூலிகளாக மாறி, பழிவாங்கும் நோக்கில், தமிழீழ விடுதலைப்போராட்டத்தையும் எமது தேசிய சின்னங்களையும் அழித்து வருவது நிறுத்தப்படவேண்டும். இவ்வாறானவர்கள் நாடாத்தும் அமைப்புக்களிலும் நிகழ்வுகளில் கலந்து கொண்டு, அவர்கள் புரியும் துரோகத்துக்கு துணைபோக வேண்டாம் என உரிமையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

# பிரித்தானிய தமிழர் பேரவைக்கு பொன். தியாகம் அப்பாவின் உருக்கமான வேண்டுகோள்

ஆர்த்தி திங்கள், மே 15, 2017 - 22:53 மணி



எமது தேசியக் கொடி எமது ஈழநாட்டின் விடுதலைக்காக மாவீரர்களும் மக்களும் தங்கள் இன்னுயிரை படையலாக்கிப் பெற்று தந்தது. அது எமது ஈழ தேசத்தின் தேசியத்தை உலகத்துக்கு எடுத்துக்காட்டும் உயரிய உன்னதமான பெருமையான பெறுமதியான சின்னம். தமிழருக்கு ஒரு நாடு இருக்கிறது என்பதை எடுத்துக்காட்டும் பண்பு இதற்கு உண்டு.

பல ஆண்டுகளாக எமது தேசியக்கொடி பல சர்வதேச நாடுகளில் தமிழர்களால் மேற்கொள்ளப்படும் அனைத்து நிகழ்வுகளிலும் ஏற்றப்படுகிறது. போராட்டத்துக்கு தடைவிதித்த நாடுகள்கூட எமது தேசியக்கொடியை ஏற்றத் தடைவிதிக்கவில்லை. எம்மில் சிலர் தான் நான்பெரிது நீ பெரிது என்று பல நாடுகளிலும் பிரிந்து நின்று எமது தமிழீழ நாட்டின் தேசியத்துக்குக் களங்கம் விளைவிக்கிறோம். இது கட்டாயமாகத் தவிர்க்கப் படவேண்டும்.

எமது விடுதலைக்கான போராட்டம் நின்றிவிடவில்லை. வடிவமதான்தான் மாறியுள்ளது. இலட்சியம் என்றும் மாறாது. மக்களுக்காகவே நாடும் அதன் தேசியமும். எமது தலைமையின் வழிகாட்டலையும் மாவீரர்களின் அர்ப்பணிப்பையும் நாங்கள் மதித்து ஏற்று நடத்தல் எமது தலையாய கடமை. தேசியக்கொடி எமது உயிரிலும் மேலானது உன்னதமானது. தமிழன் உலகில்எங்கெல்லாம் வாழ்கிறானோ அங்கெல்லாம் தேசியக்கொடி ஏற்றப்பட்டு, எம்நாட்டு அரச கலைஞர் தம்பி புதுவை இரத்தினதுரை ஆக்கித் தந்த தேசிய கீதம் இசைக்கப்பட வேண்டும். தவறுவோர் எதிர்ப்போர் தயவு செய்து இந்தக் கொடிய துரோகத்துக்கு ஆளாகாமல் ஒதுங்கிவிடுங்கள்.

இதை எமது மாவீரர் பணிமனை சார்பாக அறிக்கையாக ஏற்று நடக்குமாறு மாவீரர் பெயரால், எமது தலைமையின் சார்பாக வினயமாக வேண்டிக் கொள்கிறேன்.

தமிழரின் தாகம் தமிழீழ தாயகம்

நன்றி.

பொன் தியாகம்.

பணி முன்னவர்

தேசிய மாவீரர் பணிகள் செயலகம்.

தமிழீழம்.

சங்கதி 24



# கொடுந்துரோகம் செய்ய வேண்டாம் - பிரித்தானிய தமிழர் பேரவைக்கு பொன்.தியாகம் எச்சரிக்கை!

May 16, 2017



தமிழீழ தேசியக் கொடியை ஏற்க மறுப்பதன் மூலமும், அதனை நிராகரிப்பதன் மூலமும் தேசத்திற்குக் கொடுந்துரோகம் செய்ய வேண்டாம் என்று பிரித்தானிய தமிழர் பேரவைக்குத் தமிழீழ தேசிய மாவீரர் பணிகள் செயலகத்தின் பணி முன்னவரும், மூன்று மாவீரர்களின் தந்தையும், போராளியாகப் பணிபுரிந்தவருமான பொன்.தியாகம் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

பொதுநிகழ்வுகளில் தமிழீழ தேசியக் கொடி ஏற்றப்படுவதைக் கடுமையாக எதிர்த்து வரும் பிரித்தானிய தமிழர் பேரவை, வரும் 18.05.2017 வியாழக்கிழமை மதியம் 2:00 மணிக்குப் பிரித்தானியப் பிரதமரின் வாசத்தலம் முன்பாகத் தமிழீழத் தேசியக் கொடியேற்றலுடன் தமிழர் ஒருங்கிணைப்புக் குழு ஏற்பாடு செய்துள்ள முள்ளிவாய்க்கால் தமிழின அழிப்பு நினைவெழுச்சி நாள் நிகழ்வைத் திசைதிருப்பும் நோக்கத்துடன் தேசியக் கொடியேற்றல் அற்ற போட்டி நிகழ்வைப் பிறிதொரு இடத்தில் ஏற்பாடு செய்துள்ளது.



***(தமிழீழ தேசியக் கொடியை நிராகரிக்கும் BTF தலைவர் ரவி)***

இந்நிலையில் இது குறித்து அறிக்கை ஒன்றை வெளியிட்டிருக்கும் பொன்.தியாகம், தமிழீழ தேசியக் கொடியை ஏற்க விருப்பமில்லை என்றால் ஒதுங்கிக் கொள்ளுமாறு பிரித்தானிய தமிழர் பேரவையைக் கோரியுள்ளார்.


அவரது முழு அறிக்கை:



"இயற்கை எனது நண்பன்; வாழ்க்கை எனது தத்துவாசிரியன்; வரலாறு எனது வழிகாட்டி."
**தமிழீழத் தேசியத் தலைவர்**

தேடல்

தேடுங்கள் | தேடல்




Facebook

Mediacentre - ஊடகமை.
2 153 mentions J'aime

J'aime cette Page | Partager

Soyez le premier de vos amis à aimer ça.

Adverts

"எமது தேசியக் கொடி எமது ஈழநாட்டின் விடுதலைக்காக மாவீரர்களும் மக்களும் தங்கள் இன்னுயிரை படையலாக்கிப் பெற்று தந்தது. அது எமது ஈழ தேசத்தின் தேசியத்தை உலகத்துக்கு எடுத்துக்காட்டும் உயரிய உன்னதமான பெருமையான பெறுமதியான சின்னம். தமிழருக்கு ஒரு நாடு இருக்கிறது என்பதை எடுத்துக்காட்டும் பண்பு இதற்கு உண்டு.

பல ஆண்டுகளாக எமது தேசியக்கொடி பல சர்வதேச நாடுகளில் தமிழர்களால் மேற்கொள்ளப்படும் அனைத்து நிகழ்வுகளிலும் ஏற்றப்படுகிறது. போராட்டத்துக்கு தடைவிதித்த நாடுகள்கூட எமது தேசியக்கொடியை ஏற்றத் தடைவிதிக்கவில்லை. எம்மில் சிலர் தான் 'நான் பெரிது நீ பெரிது' என்று பல நாடுகளிலும் பிரிந்து நின்று எமது தமிழீழ நாட்டின் தேசியத்துக்குக் களங்கம் விளைவிக்கிறோம். இது கட்டாயமாகத் தவிர்க்கப்பட வேண்டும்.

எமது விடுதலைக்கான போராட்டம் நின்றுவிடவில்லை. வடிவம்தான் மாறியுள்ளது. இலட்சியம் என்றும் மாறாது. மக்களுக்காகவே நாடும் அதன் தேசியமும். எமது தலைமையின் வழிகாட்டலையும் மாவீர்ர்களின் அர்ப்பணிப்பையும் நாங்கள் மதித்து ஏற்று நடத்தல் எமது தலையாய கடமை. தேசியக்கொடி எமது உயிரிலும் மேலானது; உன்னதமானது. தமிழன் உலகில் எங்கெல்லாம் வாழ்கிறானோ அங்கெல்லாம் தேசியக்கொடி ஏற்றப்பட்டு, எம்நாட்டு அரச கலைஞர் தம்பி புதுவை இரத்தினதுரை ஆக்கித் தந்த தேசிய கீதம் இசைக்கப்பட வேண்டும். தவறுவோர்> எதிர்ப்போர் தயவு செய்து இந்தக் கொடிய துரோகத்துக்கு ஆளாகாமல் ஒதுங்கி விடுங்கள்.

இதை எமது மாவீரர் பணிமனை சார்பாக அறிக்கையாக ஏற்று நடக்குமாறு மாவீரர் பெயரால், எமது தலைமையின் சார்பாக வினயமாக வேண்டிக் கொள்கிறேன்.

'தமிழரின் தாகம் தமிழீழ தாயகம்'

நன்றி.

பொன் தியாகம்.
பணி முன்னவர்
தமிழீழ தேசிய மாவீரர் பணிகள் செயலகம்."

SHARE Facebook Twitter Google+

Government and Politics in Sri Lanka Click here to buy the book. CLICK HERE

செய்திகள்

**விடுதலைத் தேரை தொடர்ந்து முன்நகர்த்திச் செல்வதற்கான உந்துவிசையே முள்ளிவாய்க்கால்**
செவ்வாய் May 16, 2017
உலகத் தமிழினத்தின் அசைவியக்கம் ஒரே நேர்கோட்டில் நிலைகுத்தி நின்ற நாட்களை ஒவ்வொரு ஆண்டும் கடந்து செல்வதென்பது வார்த்தைகளில் வடித்துவிட முடியாத பெருந்துயராக இருக்கின்ற போதிலும், நடந்த இனவழிப்பிற்கான



**தமிழீழ விடுதலைப் புலிகளைக் களங்கப்படுத்தும் ஐ.பி.சிக்கு எதிராக ஊடகவியலாளர்கள் போர்க்கொடி!**
திங்கள் May 15, 2017
கடனட்டை மோசடி, பயண ஆட்கடத்தல், போதைப்பொருள் கடத்தல் ஆகியவற்றில் தமிழீழ விடுதலைப் புலிகளின் செயற்பாட்டாளர்கள் ஈடுபடுகின்றார்கள் என்று குற்றம் சுமத்தியும், நியூயோர்க் இரட்டைக் கோபுரத் தாக்குதல்களுடன்



**அப்பாவின் அகதி வாழ்க்கை!**
திங்கள் May 15, 2017
தந்தையின் அகதி வாழ்க்கையை மீட்டுப்பார்த்த கனடா வாழ் ஈழ தமிழ்ப் பெண்.



**5 வது நாளாக யேர்மனியில் நடைபெற்றுவரும் விழிப்புணர்வு ஊர்திப்பயணம் Essen நகரை வந்தடைந்தது**
திங்கள் May 15, 2017
ஈழத்தமிழர்களுக்கு பரிகார நீதியை கோரி யேர்மனியில் 5 நாளாக நடைபெற்றுவரும் விழிப்புணர்வு.



**யேர்மன் தலைநகரத்தில் ஈழத்தமிழர்களின் இனவழிப்பை எடுத்துரைக்கும் மரம்**
திங்கள் May 15, 2017
ர்லின் வாழ் சில உறவுகள் இம் மரத்தை பார்வையிட்டு வணக்கம் செலுத்தினர்.




**டென்மார்கில் நடைபெற்ற் ஆற்றுகை வெளிப்பாட்டுத் தேர்வு**
ஞாயிறு May 14, 2017
அனைத்துலகத் தமிழ்க்கலை நிறுவகத்துடன் மாலதி தமிழ்க் கலைக்கூடம் இணைந்து நடாத்திய இசை, நடன ஆற்றுகை.

# தமிழனின் அடையாளமாக விளங்கும் தேசிய கொடியை பறக்கவிடுங்கள், நாங்கள் யார் என்பதை அது கூறி நிற்கும்

namathueelanadu.com/

## புலம்பெயர் அமைப்புக்களுக்கு உணர்ச்சிக் கவிஞர் காசியானந்தன் அறைகூவல்!



மே 18 அன்று நடைபெறவிருக்கும் முள்ளிவாய்க்கால் இனப்படுகொலை நினைவு நிகழ்வுகளின் போது, உலகெங்கும் உள்ள புலம்பெயர் மக்கள், தமிழீழ தேசியக்கொடியை ஏற்றி, இனப்படுகொலைக்கு உள்ளான தமிழ் மக்களுக்கு உணர்வுபூர்வமாக நினைவு கூர்ந்து வருகின்றர். ஆனால் பிரித்தானியாவில் உள்ள பிருத்தானிய தமிழர் பேரவை என்ற அமைப்பு மட்டுமே தேசியக்கொடியை புறக்கணிப்பு செய்து, தேசிய விடுதலைப் போராட்டத்தையும், மடிந்த மக்களையும் அவமதித்து வருவது உலகெங்கும் உள்ள தமிழ் மக்களை கொதித்து எழ வைத்துள்ளது. இது தொடர்பாக கருத்து வெளியிட்டு வரும் பல தரப்பட்ட பிரமுகர்களும் ஒருமித்த குரலில், தேசிய தினங்கள் தனி அமைப்புக்களின் விருப்புகளுக்கும் தேவைகளுக்கும் அமைய நடாத்தப்படக்கூடாது. அவை அவற்றுக்குரிய நியமங்களின் படியே நடைபெறவேண்டும் எனவும் இதனை ஏற்க மறுப்பவர்கள் இந்த நிகழ்வுகளை நடத்தாமல் ஒதுங்க வேண்டும் என்றும் பகிரங்கமாக அழைப்பு விடுத்து வருகிறார்கள்.

இந்த வகையில், இந்தியாவில் கடும் கொடுப்பிடிகளுக்கு மத்தியில் சிறைப்படுத்தப்பட்டு வாழும் நிலையிலும், தமிழீழ விடுதலைக்காக அயராது உழைத்து வரும், தமிழீழ தேசிய புரட்சிக்கவிஞர் காசியானந்தன் அவர்கள் வழங்கியுள்ள முள்ளிவாய்க்கால் தின உரையில் புலம்பெயர் அமைப்புக்களுக்கு அறைகூவல் விடுத்துள்ளார்.

அந்த உரையில் "இந்த நாளில் விடுதலைப்போராட்டத்தின் கொடியான புலிக்கொடியை ஏற்றுவோம் கம்பங்களில் புலிக்கொடியை ஏற்றுவோம் கைகளில் புலிக்கொடியை ஏந்துவோம் புலிக்கொடி தமிழீழ மக்களுடைய போராட்டத்தின் அடையாளம், தமிழீழ மக்களின் போராட்டத்தின் சின்னம் புலிக்கொடி, ஒரு கம்பத்தை நடுவோம் அந்தக்கம்பத்தின் காற்றில் மிடுக்கொடு புலிக்கொடி பறக்கட்டும், புலிக்கொடியை பார்க்கிறவனுக்கு தெரிய வேண்டும் இந்த புலிக்கொடி பறக்கிறது என்றும் போராட்டம் தொடர்கிறது என்று பொருள் படும் . புலிக்கொடி பறக்கட்டும் இன்னும் தமிழீழ மக்கள் களத்தில் நிற்கிறார்கள் என்று புரிந்துகொள்ளட்டும்" என்று உணர்வுபூர்வமாக வேண்டியுள்ளார்.

இந்த உரையின் முழுவடிவம் பிரித்தானிய பிரதமர் அலுவலகத்தின் முன்னாள் இடம்பெறும் முள்ளிவாய்க்கால் தின நிகழ்வுகளின் போது, திரையிடப்படும்.

நமது ஈழநாடு
www.namathueelanadu.com




# இனப்படுகொலை குற்றத்தில் இருந்து சிங்கள அரசை காப்பாற்றும் நிகழ்ச்சிநிரலின் முதல்படிதான் பிரித்தானிய தமிழர் பேரவையின் தேசியக்கொடி மறுப்பு!

MAY 15, 2017 by ADMIN in சிறப்புச் செய்திகள், செய்திகள், பிரதான செய்தி with 0 COMMENTS

– முன்னாள் உதவிக் கல்விப்பணிப்பாளர் வசந்தகுமாரி சந்திரபாலன்-





மே-18 என்பது தமிழர்கள் வாழ்வில் கறைபடிந்த நாள். கொத்துக் கொத்தாய் தமிழர்கள் கொன்றொழிக்கப்பட்ட நாள். பல்லாயிரக்கணக்கான மக்கள் கொடூர இனவழிப்பிற்கு உள்ளாக்கப்பட்டு எமது தாய்நிலம் அன்னியரின் கையில் அடிமைப்பட்ட நாள். தமிழீழத்தின் தேசிய துக்கநாள்.

முள்ளிவாய்க்கால் இனவழிப்பு நடந்தேறிய மே-18 ஐ தமிழீழத்தின் தேசிய துக்கநாளாகப் பிரகடனப்படுத்தி தாயகத்திலும் சர்வதேசமெங்கும் தமிழர்கள் பரந்துவாழும் இடங்களிலெல்லாம் தேசிய இனப்படுகொலை நாளாக அனுட்டித்து வருகின்றோம்.

எமது தேசிய ஆன்மாவை போராட்டத்தின் அடுத்த பரிமாணத்தை புலம்பெயர் ஈழத்தமிழரிடம் கையளித்துவிட்டு எமது ஆயுதப்போராட்டம் மௌனிக்கப்பட்டுவிட்டது. தமிழர் தாயம் பகைவனின் கொடூர இரும்புப்பிடிக்குள் சிக்குண்டு எமது மக்கள் யுத்தத்தில் இறந்த தமது உறவுகளை நினைத்து அழுவதற்குக்கூட கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ளது.

ஆனால் நாம் செய்வது என்ன?
நாம் எல்லாவற்றையும் அன்னியரிடம் இழந்துவிட்டோம். நாடிழந்து வீடிழந்து சொந்தங்களை இழந்து இங்கு நடைப்பிணங்களாக புலம்பெயர்ந்து எம்தேசத்தின் நினைவுகளை இதயத்தில் சுமந்தபடி கனத்த இதயங்களோடு வாழ்ந்துகொண்டிருக்கின்றோம். இந்த நிலையில் எம்மை வாழவைப்பது ஈழத்தமிழன் என்ற அடையாளத்தை கொடுப்பது எமது தேசியக்கொடி மாத்திரமே.

தேசியக்கொடியென்பது எமது ஆன்மா எமது விடுதலை வேட்கையின்
பிரதிபலிப்பு எமது தேசத்தின் அடையாளம் தாயகம் நோக்கிய எமது
விடுதலைப்பயணத்தின் மூலவேர். ஈழத்தமிழர்களின் எழுச்சியின் வடிவம்.
தேசவிடுதலைக்காய் களமாடி வீழ்ந்த ஆயிரம் ஆயிரம்
விடுதலைவீரர்களின் வித்துடல்பேழையில் போர்த்தப்பட்ட கொடி
அத்துடன் அவர்கள் சிந்திய செங்குருதியில் ஊறிச்சிவந்தகொடி.

ஆனால் இன்று பிரித்தானிய தமிழர் பேரவை மக்களின் கருத்துகளிற்கு மதிப்பளிக்காது எமது தேசியக்கொடியை முற்றாகப் புறக்கணித்து தேசிய இனப்படுகொலை நாளான முள்ளிவாய்க்கால் நினைவுதினத்தை நடத்த ஏற்பாடுசெய்துள்ளது. தேசியக்கொடியை ஒரு தீண்டத்தகாத பொருளென்றும் வெள்ளைக்காரருடன் இருந்து வைன் குடிப்பதற்கு அந்தக்கொடி பிரச்சினையான பொருளென்றும் அதனால்தான் தம்மால் தேசியக்கொடி ஏற்றமுடியாது என்றும் அடாத்தாக கூறிவருவது வெந்த புண்ணில் வேலை பாச்சுவதுபோல இருக்கிறது.

தேசியக்கொடி தடைசெய்யப்பட்ட கொடியென சென்றவருடம் பரப்பிய வதந்திகள் மக்களால் முறியடிக்கப்பட்ட நிலைமில் இந்த வருடம் புதிய வதந்தியை பரப்பிவிடுவதற்கு பிரித்தானிய தமிழர் பேரவை முயற்சி செய்து வருகின்றது.

நாடுகடந்த தமிழீழ அரசாங்கம் மற்றும் சில அமைப்புகள் தமிழீழ தேசியக்கொடியை சுமந்தவாறு பல்வேறு நாட்டு முக்கிய தலைவர்களையும் இராஜதந்திரிகளையும் பிரதிநிதிகளையும் சந்தித்து பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டுவருவது குறிப்பிடத்தக்கது. இதுவரைக்கும் யாரும் அவர்களிடம் தேசியக்கொடியை கைவிட்டு வருமாறு சொன்னதாக தெரியவில்லை. தேசியக் கொடியை கைவிட்டு அவர்களும் எதுக்கும் போவதற்கும் தயாராகவும் இல்லை.

இதிலிருந்து சில உண்மைகளை மக்கள் புரிந்துகொள்ளவேண்டும். தமிழீழத்தேசியக்கொடி இலங்கையை தவிர


**சிறப்பு கட்டுரைகள்**

NO PREVIEW

தமிழரின் ஒற்றுமை குலைந்தால்....

**ENGLISH NEWS**

We must call for a referendum to determine the political status of Tamil people in Sri Lanka!

15 YEAR OLD TEENAGER HAS BEEN ABDUCTED BY A GANG OF 13 WHO CAME IN MOTORCYCLES

TAMIL NATIONAL FLAG

Home Office And The British Judiciary Accepts On-Going Torture In Sri Lanka By Continue To Grant Political Asylum

TREE FOR JUSTICE CAMPAIGN TO COMMEMORATE THE TAMIL GENOCIDE AND TAMIL MARTYRS

**அதிகம் படிக்கப்பட்டவை**

தமிழனின் அடையாளமாக விளங்கும் தேசிய கொடியை பறக்கவிடுங்கள், நாங்கள் யார் என்பதை அது கூறி நிற்கும்
MAY 16, 2017

Tamil leader blames the translator for 'separate state' demand
JUNE 14, 2012

Sri Lanka's ex-army chief vows to win next polls
JUNE 14, 2012

இலங்கை செல்லும் சிவ் சங்கர் மேனன் : புதிய பேரம்?
JUNE 14, 2012

நாட்டை பிரிக்கும் ஏற்பாடுகள் எம்மிடம் இல்லை – இரா.சம்பந்தன்
JUNE 14, 2012

கிளிநொச்சி கண்டாவளையில் படையினரின் தாக்குதலில் 9பேர் காயம்!
JUNE 8, 2012


ஜெனிவாவில் இருந்து வந்த அமெரிக்க உயரதிகாரி சம்பந்தனுடன் தனியாகச் சந்திப்பு
MARCH 17, 2012


இராணுவ மயமாக்கல் வன்முறைகளுக்கு வழிவகுக்கக் கூடும்
MARCH 17, 2012


கொடூரங்களைப் புரிந்தாலும் சிறிலங்காவுக்கு பிரித்தானியா ஆயுத உதவி – பலத்த சர்ச்சை
MARCH 17, 2012


நாமல் ராஜபக்சவுக்கு விருது வழங்கி கௌரவிக்கும் இந்திய அரசாங்கம்
MARCH 17, 2012

**முரண்வெளி**



எந்தவொருநாட்டிலும் தடையில்லை. யாரும் தேசியக்கொடியை ஏற்றவேண்டாமென்றும் கூறவில்லை. மாறாக இலங்கை அரசாங்கத்தை திருப்திப்படுத்த அல்லது மகிழ்ச்சிப்படுத்தவே பிரித்தானிய தமிழர்பேரவை தேசியக்கொடியை புறக்கணித்து முள்ளிவாய்க்கால் நினைவு தினத்தை நடாத்தவிளைகிறது. அப்படியாயின் எம்மைக்கொன்றழித்த இலங்கை அரசாங்கத்தை பிரித்தானிய தமிழர்பேரவை ஏன் திருப்திப்படுத்தவேண்டும்? பிரித்தானிய தமிழர் பேரவையும் விலைபோய்விட்டதா? பிரித்தானிய தமிழர்பேரவை தேசியக்கொடியை புறக்கணிப்பதற்கு வழங்கப்பட்ட விலை என்ன? அதன்பின்னால் உள்ள நிகழ்ச்சி நிரல் என்ன?

இனப்படுகொலையை நிருபிப்பதாயின் முதலில் தமிழீழ மக்களாகிய நாம் ஒரு இறையாண்மையுள்ள இனம் என்பதை நிருபிக்க வேண்டும். தேசம் இழந்து நிற்கும் எமக்கு, தற்போதய நிலையில் எமது இறையாண்மையை பறைசாற்றி நிற்பது தேசியக் கொடியே. அதனை புறக்கணித்து, மக்கள் மத்தியில் மறக்கச் செய்வதன் மூலம் எம்மை ஒரு தனித்த இனமல்ல என நிறுவ முயல்கிறது சிங்கள அரசு. அதற்கு துணைபோகிறது பிரித்தானிய தமிழர் பேரவை. நாம் ஒரு தேசிய இனம் அல்ல என்றாகிவிட்டால் 'இனப்படுகொலை' என்ற சொற்பதமே அர்த்தமற்றதாகிவிடும். சிங்கள அரசை பாதுகாக்க தீட்டப்படும் நீண்டகால நிகழ்ச்சிநிரல் இதுவேயாகும்.

தேசியக்கொடியை வெளிப்படையாக புறக்கணிக்கும் பிரித்தானிய தமிழர் பேரவையை அனைவரும் புறக்கணிப்பதன் மூலம்தான் எமது அடையாளங்களை கைவிட நினைக்கும் அனைவருக்கும் ஒரு பாடத்தை நாம் கற்பிக்க முடியும்.

அடையாளமிழந்த மனிதன் ஆணிவேர் இழந்த மரத்துக்கு சமன். ஆகவே தேசியக் கொடியை ஏற்றி மீண்டும் எழுந்து நிற்போம். இம்முறை கடந்த முறையைவிட பலமாக எழுந்து நிற்போம். வேற்றுமைகளை மறந்து ஒரே கொடியின் கீழ் ஒன்றாக இணைந்து நிற்போம்.

**தமிழரின் தாகம் தமிழீழத் தாயகம்**

திருமதி. வசந்தகுமாரி சந்திரபாலன் யாழ். இந்து மகளிர் கல்லூரியில் கல்விகற்று, மகரகம ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் பயிற்றபட்ட ஆசிரியராக பட்டம்பெற்றவர். யோகபுரம் மகாவித்தியாலயத்தில் 9 வருடங்கள் கல்விச்சேவையை வழங்கிய, பின்னர் இவர் உதவிக் கல்விப்பணிப்பாளராக 10 வருடங்கள் துணுக்காய் வலயக்கல்வி அலுவலகத்தில் சேவையாற்றியவர். தமிழீழ விடுதலைப்புலிகளின் விளையாட்டுத்துறையின் நிறைவேற்று பணிப்பாளர்களில் ஒருவராக கடமையாற்றிய இவர், விடுதலைப்புலிகளின் மகளிர் வலைப்பந்தாட்ட அணி பயிற்றுவிப்பாளராகவும் செயற்பட்டவர். செஞ்சோலை சிறுவர் இல்லம் மற்றும் பல சிறுவர் இல்லங்களிலும் கல்விச்சேவை வழங்கியவர். பல அரசியல் நிகழ்வுகளை முன்னின்று நடாத்தியவர். இறுதி யுத்தத்தின் சாட்சியங்களுள் ஒருவரான, சிங்கள இனவெறி அரசால் தடுத்து வைக்கபட்டு சித்திரவதைகளுக்கு உள்ளானவர். தற்போது பிரித்தானியாவில் தமிழீழ நாடு கடந்த அரசாங்கத்தின் ஒருங்கிணைப்பாளர்களுள் ஒருவராக தொடர்ந்தும் தேசிய விடுதலைப்போராட்டத்திற்கு அயராது உழைத்து வருகிறார்.

## Related Posts


- தமிழனின் அடையாளமாக விளங்கும் தேசிய கொடியை பறக்கவிடுங்கள், நாங்கள் யார் என்பதை அது கூறி நிற்கும்
- பிரித்தானியா தமிழர் பேரவைக்கு (BTF) வைத்தியர் வரதராஜா உருக்கமான வேண்டுகோள்
- ஈழத்தமிழர்கள் ஒரு தேசிய இனமல்ல என்று ஏற்றுக் கொள்வதே தேசியக் கொடியைக் கைவிடுவதன் விளைவாகும்!
- தேசியக் கொடியை கைவிட்டால் மட்டுமே இராஜதந்திர நகர்வுகளை மேற்கொள்ளமுடியும் என்று அப்பாவி மக்களை நம்ப வைக்கமுயலும் தரங்கெட்ட அரசியலில் இருந்து விடுபடுவோம்!
- We must call for a referendum to determine the political status of Tamil people in Sri Lanka!
- 15 YEAR OLD TEENAGER HAS BEEN ABDUCTED BY A GANG OF 13 WHO CAME IN MOTORCYCLES
- கேப்பாப்புலவு மக்களினுடைய நில ஆக்கிரமிப்பு என்பது மிகவும் கொடுமையானது
- Home Office And The British Judiciary Accepts On-Going Torture In Sri Lanka By Continue To Grant Political Asylum
- பிரித்தானியா பிரதமருக்கு புலம்பெயர் இளைஞர்கள் அவசர மனு கையளிப்பு
- அகதித் தஞ்சம் தொடர்பான விழிப்புணர்வுக் கருத்தரங்கு


© 2009 – 2016 நமதுஈழநாடு.கொம். All rights reserved. அனைத்துத் தகவல்களையும் உடனுக்குடன் பதிவு செய்து தரும் இணையத்தளம்

நமது ஈழ நாடு
www.namathueelanadu.com



# தேசியக்கொடியேற்ற மறுப்பது இழிவான செயலாகும்!

MAY 15, 2017 by ADMIN in சிறப்புச் செய்திகள், செய்திகள், பிரதான செய்தி with 0 COMMENTS

– பிரித்தானிய தமிழர் பேரவைக்கு தாயகத்திலிருந்து ஒரு மாவீரர்களின் தாய் உருக்கமான வேண்டுகோள் –



உலகெங்கும் முள்ளிவாக்கால் தினம் தமிழீழ தேசியக்கொடியேற்றலுடன் உணர்வுபூர்வமாக நடைபெற்று வரும் இந்த வேளையில், பிரித்தானியாவில் பிரித்தானிய தமிழர் பேரவை தேசியகொடியை உதாசீனம் செய்து வருவது புலம்பெயர் மக்களை மட்டுமன்றி, தாயகத்தில் வாழும் தமிழ் உறவுகளையும் கொதித்தெழ வைத்துள்ளது.

அவ்வாறு கொதித்து எழும் மக்களின் சார்பாக, பிரித்தானிய தமிழர் பேரவையிடம் உருக்கமான வேண்டுகோளை விடுக்கும் வகையில், தாயகத்தில் வாழும் லெப்ரினன் மணியரசன் மற்றும் வீரவேங்கை கலைஅரசி ஆகியோரின் தாயார் திருமதி சுந்தரவடிவேல் அவர்கள் கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்.

அந்த கடிதத்தில், தேசியக்கொடியென்பது நாம் இழந்துவிட்ட இறைமையையும் எமது இனத்தின் மதிப்பையும் நிலைநாட்டுகின்ற முதன்மைப் பொருளாகும். இவற்றை முதன்மைப்படுத்தி எமது விடுதலை வேணவாவை உலகுக்கு பறைசாற்றவேண்டியது அனைவரதும் கடமையாகும் என தாயார் திருமதி சுந்தரவடிவேல் அவர்கள் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,
'தேசியக்கொடியென்பது வெறும் துணியல்ல அது எமது பிள்ளைகளின் இரத்தத்தாலும் தசையாலும் நெய்யப்பட்டது. ஆயிரமாயிரம் வீர மறவர்களினதும் அவர்களோடு இறுதிவரை கூடநின்ற மக்களினம் ஆன்மாவால் உருவானது. இன்று அத்தகைய மதிப்புமிக்க எமது தேசிய அடையாளத்தை பிரித்தானிய தமிழர் பேரவை தீண்டத்தகாத ஒரு பொருளாக கருதி மக்களது உருக்கமான வேண்டுகோளைப் புறக்கணித்து தமிழின இனவழிப்பு நாளை அனுட்டிக்கவுள்ளமை வெந்த புண்ணில் வேல்பாச்சுவதுபோல உள்ளது.

பிரித்தானிய தமிழர் பேரவையின் இத்தகைய அடாத்தான செயல் மாவீரர்களின் தியாகங்களையும் தாயக மக்களின் அர்ப்பணிப்புகளையும் கொச்சைப்படுத்துதவதுபோல் உள்ளது. அதேநேரம் ஆயிரம் ஆயிரம் மாவீரர்கள் களமாடிச் சாதித்துப் பெற்றுக்கொடுத்த தளத்திலிருந்துகெண்டு எமது மக்களின் விடுதலை உணர்வை அழிக்க நினைப்பது ஒரு வரலாற்றுத் துரோகமாகும்.

எனவே தமிழீழ தேசியத்தை புறக்கணித்து தேசியக்கொடியை அவமதித்து விடுதலைக்காக வீழ்ந்த மறவர்களினதும் மக்களினதும் தியாகத்தின்மேல் நின்று கூத்தாடும் பிரித்தானியத் தமிழர் பேரவையை புறக்கணித்து விடுதலையின்பால் உண்மையான பற்றுக்கொண்டு தேசிய அடையாளங்களை மதித்து தேசியக்கொடியேற்றி நிகழ்வைச்செய்யும் உண்மையான மக்கள் பிரதிநிதிகள் பின்னால் அனைவரையும் அணிதிரழுமாறு விடுதலைப் போராட்டத்திற்காய் இரண்டு பிள்ளைகளை ஈய்ந்த தாய் என்ற உரிமையுடன்

## சிறப்பு கட்டுரைகள்

NO PREVIEW

தமிழரின் ஒற்றுமை குலைந்தால்....

## ENGLISH NEWS


We must call for a referendum to determine the political status of Tamil people in Sri Lanka!


15 YEAR OLD TEENAGER HAS BEEN ABDUCTED BY A GANG OF 13 WHO CAME IN MOTORCYCLES


TAMIL NATIONAL FLAG


Home Office And The British Judiciary Accepts On-Going Torture In Sri Lanka By Continue To Grant Political Asylum


TREE FOR JUSTICE CAMPAIGN TO COMMEMORATE THE TAMIL GENOCIDE AND TAMIL MARTYRS

## அதிகம் படிக்கப்பட்டவை


தமிழனின் அடையாளமாக விளங்கும் தேசிய கொடியை பறக்கவிடுங்கள், நாங்கள் யார் என்பதை அது கூறி நிற்கும்
MAY 16, 2017


Tamil leader blames the translator for 'separate state' demand
JUNE 14, 2012


Sri Lanka's ex-army chief vows to win next polls
JUNE 14, 2012


இலங்கை செல்லும் சிவ் சங்கர் மேனன் : புதிய பேரம்?
JUNE 14, 2012


நாட்டை பிரிக்கும் ஏற்பாடுகள் எம்மிடம் இல்லை – இரா.சம்பந்தன்
JUNE 14, 2012


கிளிநொச்சி கண்டாவளையில் படையினரின் தாக்குதலில் 9பேர் காயம்!
JUNE 8, 2012



ஜெனிவாவில் இருந்து வந்த அமெரிக்க உயரதிகாரி சம்பந்தனுடன் தனியாகச் சந்திப்பு
MARCH 17, 2012


இராணுவ மயமாக்கல் வன்முறைகளுக்கு வழிவகுக்கக் கூடும்
MARCH 17, 2012


கொடூரங்களைப் புரிந்தாலும் சிறிலங்காவுக்கு பிரித்தானியா ஆயுத உதவி – பலத்த சர்ச்சை
MARCH 17, 2012


நாமல் ராஜபக்சவுக்கு விருது வழங்கி கௌரவிக்கும் இந்திய அரசாங்கம்
MARCH 17, 2012

**முரண்வெளி**



கேட்டுக்கொள்கிறேன்'.

தம்மை மக்கள் பிரதிநிதியாக காட்டிக்கொண்டு அரசியல் நடாத்த முயலும் பிரித்தானிய தமிழர் பேரவை, புலம்பெயர் தமிழ் மக்களின் கருத்துக்களுக்கும் அபிலாசைக்கும் செவிசாய்க்காமல் தான்தோன்றித்தனமாக செயற்பட்டு வருவது யாவரும் அறிந்ததே. ஆவர்கள் தாயகத்தில் வாழும் எமது உறவுகளின் கோரிக்கைகளுக்காவது செவிசாய்ப்பார்களா?

Related Posts

- தமிழனின் அடையாளமாக விளங்கும் தேசிய கொடியை பறக்கவிடுங்கள், நாங்கள் யார் என்பதை அது கூறி நிற்கும்
- இனப்படுகொலை குற்றத்தில் இருந்து சிங்கள அரசை காப்பாற்றும் நிகழ்ச்சிநிரலின் முதல்படிதான் பிரித்தானிய தமிழர் பேரவையின் தேசியக்கொடி மறுப்பு!
- பிரித்தானியா தமிழர் பேரவைக்கு (BTF) வைத்தியர் வரதராஜா உருக்கமான வேண்டுகோள்
- ஈழத்தமிழர்கள் ஒரு தேசிய இனமல்ல என்று ஏற்றுக் கொள்வதே தேசியக் கொடியைக் கைவிடுவதன் விளைவாகும்!
- தேசியக் கொடியை கைவிட்டால் மட்டுமே இராஜதந்திர நகர்வுகளை மேற்கொள்ளமுடியும் என்று அப்பாவி மக்களை நம்ப வைக்கமுயலும் தரங்கெட்ட அரசியலில் இருந்து விடுபடுவோம்!
- We must call for a referendum to determine the political status of Tamil people in Sri Lanka!
- 15 YEAR OLD TEENAGER HAS BEEN ABDUCTED BY A GANG OF 13 WHO CAME IN MOTORCYCLES
- கேப்பாப்புலவு மக்களினுடைய நில ஆக்கிரமிப்பு என்பது மிகவும் கொடுமையானது
- Home Office And The British Judiciary Accepts On-Going Torture In Sri Lanka By Continue To Grant Political Asylum
- பிரித்தானியா பிரதமருக்கு புலம்பெயர் இளைஞர்கள் அவரச மனு கையளிப்பு

© 2009 - 2016 நமதுஈழநாடு.கொம். All rights reserved.

அனைத்துத் தகவல்களையும் உடனுக்குடன் பதிவு செய்து தரும் இணையத்தளம்

# தேசிய கொடியை மறுப்பதன் மூலம், தமிழனை அடையாளம் இழக்கச் செய்யும் பிரித்தானிய தமிழர் பேரவையின் சதி!

namathueelanadu.com/

**– வீரகேசரி முன்னாள் நிருபர் அல்வின் சுகிர்தன் –**

'ஈழத்தின் வேதனை தீர்த்த கொடி – எட்டுத்
திக்கிலும் மானத்தை சேர்த்த கொடி||

எங்கள் ஈழத்தின் கொடிய வேதனை நிறைந்த அந்த கோரப்படுகொலை அரங்கேறிய நாளிற்கு இன்னும் சில மணி நிசிகளே உள்ள போது அந்த ஆறா வேதனையை தீர்க்கவல்லது எங்கள் தேசியக் கொடி என்பதை தமிழ் தேசியக் கீதமே எங்களிற்கு சொல்லி நிற்கின்றது என்பதை வாசகனுக்கு முதலில் அழுத்திக்கொண்டு என் மன எழுகையை விரிக்கின்றேன்.

ஓர் இனத்தின் தலைவர் படை ஆட்சி என்பவற்றை விடவும் உயர்ந்ததாக அவ்வினத்தின தேசிய கொடி மதிக்கப்படுகின்றது. ஏனவே தான் எந்தவொரு நாட்டிலும் எச்;சிறப்பு நிகழ்வுகளிலும் அவ்வினத்தின் தேசியக்கொடி ஏற்றப்பட்டு தலைவர் படை அரசு உட்பட குடிமக்கள் அனைவரும் அக்கொடியின் கீழ் திரண்டு வணக்கம் செய்வர்.

'இது யாவரும் அறிந்த ஒன்றே!' என்ற வாசகனின் வியப்பிற்கு என் பதில்இ பிரித்தானியாவில் நினைவு கூறப்படவுள்ள முள்ளிவாய்க்கால் இனப்படுகொலை நிகழ்வில் ஓர் அமைப்பு எம் இனத்தின் தேசிய கொடியின் கீழ் நிற்க மறுப்பதேயாகும்.

கொடியை இழந்தால் எம் இறைமையை நாம் இழப்போம் என்பதை அவர்கள் உணர்ந்து கௌ;ள வேண்டும்.

எம் இனத்துக்கான தேசிய கொடி உருவான வரலாறு மிகவும் போரட்டகரமானது. சேர சோழ மன்னன் வீழ்ந்த போது அவனது கொடி வீழ்ந்தது. பின்னர் கி.பி.1619 இல் சங்கிலிக்குமாரன் போர்துக்கேயரால் தோற்கடிக்கப்பட்ட போது நந்திக்கொடி வீழ்ந்தது. தொடர்;ந்து வன்னியை ஆண்ட பண்டார வன்னியனின் வர் கொடியும் சரிந்தது.

இவ்வாறு வீழ்த்தப்பட்ட தமிழ் இனத்தின் நிமிர்வுக்கு அதன் பண்பாட்டு மரபினை தழுவி எம் தேசிய தலைவர் பிரபாகரனால் உருவாக்கபட்ட புலிக்கொடியே இன்றும் தமிழனை தூக்கி நிற்கின்றது.

இதன் உருவாக்கம்இ போராட்டமும் வலிகளும் நிறைந்தவை என்பதை இன்று பலர் அறிந்திருக்க வாய்ப்பில்லை. இதனாலேயே அதன் புனிதத்தை உணர மறுத்து புறக்கணித்து பச்சோந்திகளாக நிற்கின்றனர் மறுப்பு வாதிகள்.

1947 ஆம் ஆண்டளவில் இலங்கையின் தேசிய கொடி எதுவாக இருக்க வேண்டும் என்பதில் தமிழருக்கும் சிங்களப் பெரும்பான்மை இனத்தவருக்குமிடையே பிளவு உருவாகிற்று. இந்நிலையில் கண்டியை ஆண்ட கடைசி மன்னன் விஜயனின் சிங்கக்கொடியை இலங்கையின் தேசிய கொடியாக Nஜ.ஆர். ஜயவர்த்தன அறிவித்தார். ஆனால் தமிழனுக்கு என்று தனிக்கொடி உள்ளது. அதுவே நந்திக்கொடிஇ எனவே மூவினத்துக்கான பொதுவான கொடியே வேண்டுமென தந்தை செல்வா போர்க்கொடி தூக்கினார். ஏனினும் 1948 பெப்ரவர் மாதம் கண்டி தலதா மாளிகையில் தேசிய கொடியாக சிங்கக்கொடி ஏற்றப்பட்டது. ஏனினும் தமிழரின் போராட்டம் நிற்கவில்லை. இதனால் தேசிய கொடி பற்றி ஆய்வு செய்ய நியமிக்கப்பட்ட குழு கொடியில் எந்த மாற்றங்களும் செய்யப்பட மாட்டாது என்றதுடன் அதில் சிறுபான்மை இனத்தவருக்காக மஞ்சள் கோட்டிற்கு வெளியே இரு பட்டைகள் மாத்திரம் இடப்படும் என 1950 இல் தீர்மானித்தது.

இதனால் 1957 இல் இலங்கையின் சுதந்திர இதினத்தை தமிழர்கள் புறக்கணித்து துக்கநாளாக அனுஷ்டித்தனர். இதில் சிங்கக்கொடியை எரித்த தமிழர்கள் சுட்டுக்கொள்ளப்பட்ட வரலாறும் உண்டு.

இந்நிலையிலேயேஇ எம் தமிழரின பாரம்பரிய பழைய வரலாறு தேசியதலைவர் பிரபாகரனால் புதுப்பிக்கப்பட்டது எனலாம். அடக்கு முறைகளுக்கு எதிராக வீறு கொண்டு எழும் தமிழ் இனம் என்பதை பிரதிபலிக்கும் நோக்கில் வட்டத்துக்கு வெளியே பாயும் புலியை கொண்ட கொடியை உருவாக்கினார்.

1977 ஆம் ஆண்டின் இறுதிப்பகுதியில் விடுதலைப்புலி கொடி தோற்றம் பெற்றது. ஆனால் ஆரம்பத்தில் அக்கொடி விடுதலை அமைப்பின் கொடியாகவே பயன்படுத்தப்பட்டு வந்தது. இந்நிலையிலேயே 1990 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 21 ஆம் திகதி அதில் இருந்த தமிழீழ விடுதலை புலிகள் என்ற எழுத்தை நீக்கி எம் தமிழ் இனத்தின் தேசிய கொடியாக தலைவர் பிரபாகரன் அறிவித்தார்.

சிங்கக் கொடியில் தமிழருக்கு சிறிய இடத்தையை கொடுத்த பேரி;னவாதத்துக்கு இது பொரும் இடியாக மாறியது.

இவ்வாறு பல போராட்டங்களுக்கும் தியாகங்களுக்கு மத்தியில் உருவாக்கப்பட்டு எம் இனத்தை அடையாளப்படுத்தி நிற்கும் கொடியை மறுப்பது தன்னை கருவில் சுமந்து உயிர் தந்தவளை மறுப்பதற்கு சமமாகும்.

தமிழர் தாயகத்தில் இறுதியாக நடத்தப்பட்டது இலங்கை படையினரது தனித்த யுத்தம் அல்ல என்பது உலகு அறிந்த விடயம். உலக அரங்கில் பேரரசுகளுடனும் வல்லரசுகளுடனுமே எமது போராட்டம் முட்டி மோதியது. தெரிந்தும் புலம்பெயர் தமிழர்கள் நாம் அவர்கள் உயிர்களைத் தியாகம் செய்து தரும் வெற்றிச் செய்திகளை கொண்டாடுவதிலும் விமர்சனம் செய்வதிலும் மாத்திரம் நின்றிருந்தோம்.

சர்வதேசம் எங்கும் பரந்து வாழும் நாங்கள் உரி;ய நேரத்தில் ஒன்றாக குரல் எழுப்ப தவறியதன் விளைவே இந்த முள்ளிவாய்;க்கால். அதே தவறை மீண்டும் செய்து இன்னுமொரு முள்ளிவாய்க்காலை உருவாக்கப்போகிறோமா? முள்ளிவாய்க்காலில் அரங்கேறியது இனப்படுகொலை என்பதற்கான ஆதாரங்கள் இருக்கின்ற போதிலும் அதற்கான நீதியை இதுவரை நாம் பெற முடியாமல் நிற்கின்றோம் என்றால் அது சர்வதேசத்தின் பாராமை அல்ல எம் இனத்திற்குள் உள்ள சுயநலமும் போட்டியுமே காரணம்.

மாவீரர் நாளில் கொடியை ஏற்றி எம் இனத்தின் வீரர்களின் தியாகத்தை மதிக்கிறோம் என மார்தட்டும் பிரித்தானியா தமிழர் பேரவை (டீவுகு) அமைப்பு இறுதி யுத்தத்தில் எம் ஒட்டுமொத்த இனத்தின் தியாகத்தை தேசிய கொடி ஏற்றி அனுஷ்டிக்க மறுப்பதன் பின்னணி என்ன?

போராட்டமும் மக்களும் வேறுவேறு அல்ல என்பதில் முதல் தெளிவுகொள்ளல் வேண்டும். தமிழருக்கு எதிரான இறுதி யுத்தத்தில் சிங்களம் தனித்து அல்லாது சர்வதேசமும் பின்னால் நிற்கும் போது அங்கு மக்களும் தான் போராடினார்கள். தனியே ஆயதம் ஏந்திக் களமாடுவது மட்டும் போராட்டமல்ல. கையில் இருந்ததை சமைத்து கொடுத்த தாய்மார் போராடினார்கள் காயப்பட்ட போராளிகளையும் மக்களையும் வைத்தியசாலைக்கு கொண்டு சென்ற தந்தையர் போராடினர் இவ்வாறு இறுதியில் அங்கு நின்ற அனைவரும் ஒரு போராளியாகவே செயற்பட்டனர். இதன் சாட்சிகள் பல புலம் பெயர் நாடுகளிலும் தற்போது உள்ளன.

இந்நிலையில் இறுதிவரை நின்று போராடிய மக்களை நினைவுகூற அவர்களின் தியாகங்களிற்கு மதிப்பளிக்க நினைவு நாளில தேசியக்கொடி ஏற்றப்படல் வேண்டும்.

ஏம் இனத்தின் போராட்ட வடிவம் மாத்திரமே மாற்றம் பெற்றுள்ளது. தமிழர் தாயகம் என்ற இலட்சியம் மாறவில்லை. புலம்பெயர் தமிழரிடமே போராட்டத்தின் புதிய வடிவத்தின் பொறுப்பு உள்ளது. ஆயுதப் போராட்டம் முடிவுக்கு வரும் வரை தாயக உறவுகள் புலம்பெயர் உறவுகளிடம் எதைக்கேட்டும் நிற்கவில்லை. 2004 ஆழிப்பேரலையின் போதும் உருண்டெழுந்து அவர்கள் தம்மை கட்டியெழுப்பத் தயாரானார்கள். ஆனால் இன்று அவர்களின் இழப்புக்கள் அதிகம். அதை பெற்றுக்கொடுக்க நிவர்த்திசெய்ய சர்வதேசத்துடன் பின்னி வாழும் புலம்பெயர்வாழ் எங்களுக்கே பொறுபுள்ளது. அந்தப் பொறுப்பிலிருந்து தவற நினைப்பது எம் இனத்துக்கு செய்யும் பெரும் துரொகமே.

இந்நிலையில் இங்;கு தன்னிச்சையாக பிரிந்து பிளவு பட்டு எமது பலத்தை குறைத்து என்ன இலக்கை தன்னிச்சைவாத அமைப்புக்கள் அடையப்போகின்றன.
ஓர் இனத்தின் விடுதலை என்ற உன்னத இலட்சியத்துக்காக பாடுபடும் எந்த அமைப்பும் அதன் அடையாளங்களை தொலைத்து விட்டோ புறக்கணித்த விட்டோ அவ்வினத்துக்கு விடுதலையை பெற்றுக்கொடுக்க முடியாது என்பது வரலாறு.

இன்று சிங்களப்பேரினவாதத்தின் ஆட்சியே இலங்கை முழுவதும் பரந்து கிடக்கின்ற போதிலும் தாயகத்தில் தற்;போதும் எம் இனம்சார்ந்த நிகழ்வுகளில் இம் தேசிய கொடியின் பிரதான வர்ணங்களான சிவப்பு மஞ்சள் கொடிகள் கட்டப்பட்டு நிகழ்வுகள் நடத்தப்படுகின்றமை யாவரும் அறிந்ததே.

உயிர் அச்சுறத்தல்களுக்கு நடுவிலும் எம் இனத்தின் அடையாளங்களை இழக்க மறுக்கும் எம் தாயக உறவுகளின் உணர்வுகளிற்கும் மனித்துவம் காக்கும் நாடுகளின் சுதந்திர நிழலில் வாழும் புலம்பெயர் எம்மவரின் உணர்வகளுக்கும் இடைவெளி அதிகம் என்றே கூறலாம்.

சாதி மத பேதமின்றி பேரினவாதத்தின் அடக்குமறைக்கு எதிராக கிளர்ந்தெழும் தமிழனாக ஒன்று திரட்டிய அப்புனித கொடியை புறக்கணிக்க முயலும் அமைப்புக்கள் மீண்டும் எம் இனத்துக்கு புதிய புதைகுழியை தோண்டி அதன் மேல் உட்கார்ந்து சுயலாபம் பெறவே முயல்கிறார்கள்.

புரித்தானியாவில் பல்லின மக்;கள் வாழுகின்றனர். அவர்கள் தங்கள் இனம் சார்ந்த நிகழ்வுகளில் தங்கள் அடையாளங்களை வெளிப்படுத்தவோ தம் இனத்தின் தேசியகொடியை ஏந்தவோ தடை இல்லை. எனவே வலிகள் நிறைந்த அந்த கொடுர இனப்படுகொலையின் ஆறாப் புண்களை உலகிற்கு மீண்டும் மீண்டும் அவிழ்த்துக்காட்டி மருந்து கேட்க எதிர் வரும் 18 ஆம் திகதி தேசிய கொடியின் கீழ் அணிதிரள வேண்டும்.

உலகில் எங்கு வாழினும் நாம் தமிழர் என்பதை அடையாளப்படுத்துவது எமது கலை கலாச்சாரம் மற்றும் சின்னங்களே. அவ்வாறு எம் சின்னத்தை தொலைக்க நிற்பது நிர்வாண கோலம்.

-சுகி